**நோயிலிருந்து மீள்வதற்கான கொவிட்-19 தடுப்பூசி பதிலளிப்பு செயற்திட்டம் - 2024**

**-----------------------------------------------------------------------------------------------------------**

நோயிலிருந்து மீள்வதற்கான கொவிட்-19 தடுப்பூசி பதிலளிப்பு செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கணக்கெழிப்பு நடவடிக்கைகளின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 யூலை 09 ஆந் திகதிய முறையே 4083-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மற்றும் 4084 எஸ்ஆர்(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளதுடன் செயற்திட்டத்தின் முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வழக்கமான தடுப்பூசி சேவை மற்றும் ஏனைய சுகாதார சேவைகளை விட்டுக்கொடுக்காமல் கொவிட்-19 இற்கு எதிராக இலங்கையின் முன்னுரிமை மக்களுக்கு பாதுகாப்பான தடுப்பூசி போடுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 32,370 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 161.85 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 30,000 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா. 2,370 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ரூபா 21,272 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 106.36 மில்லியனாக மதிப்பிடப்பட்ட கிரயம் மீள ஒதுக்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2021 ஆகஸ்ட் 19 இல் தொடங்கியிருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு 2022 திசெம்பர் 31 இல் கணக்கொழிப்பு செய்திருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண ்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள ் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய ்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள ்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர ் களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தைஉள்ளடக்குகின்ற கணக்காய ்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண ்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும ் பேணுகின்றேன் அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள ் ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 குறைவகப் பயன்படுத்திய வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| சுகாதார அமைச்சு ஒரு தடுப்பூசி ஐ.அ.டெபலர் 7 கிரயத்தில் ஐ.அ.டொலர் 118,018,600 பெறுமதியில் 16,859,800 தடுப்பூசிகளை கொள்வனவு செய்திருந்ததுடன் சொல்லப்பட்ட செயற்திட்டம் மூலம் கிரயத்தில் ஐ.அ.டொலர் 105.00 மில்லியன் மீளளிப்பு செயயப்பட்டிருந்தது. அந்த தடுப்பூசிகளில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த தடுப்பூசிகளின் 11 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மத்திய தடுப்பூசி களஞ்சியத்தில் ஐ.அ.டொலர் 12,471,788 பெறுமதியான 1,781,649 ஊசிகள் காலாவதியாகியிருந்தது. இந்த அறிக்கை திகதியில் உள்ளவாறு காலாவதியான தடுப்பூசிகளை கையதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதம தொற்றுநோய் பிரிவாளர் மற்றும் பிரதம கணக்காளரிற்கு (இருப்பு மெய்மையாய்வு) அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டிருந்ததுடன் மிகுதியாக இருக்கின்ற தடுப்பூசிகளை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். அறிக்கை பூர்த்தியாக்கபடபட்ட பின்னர் வழங்கப்படும். காலாவதியான தடுப்பூசிகள் மத்திய மருந்தக களஞ்சியத்தில் களஞ்சியப் படுத்தியிருந்ததுடன் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன். | நி.பி 104 இற்கமைய கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டும். |

### 2.2 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம் கடன் உடன்படிககை இல. 4084 இன் ஏற்பாடுகளிலிருந்து ஐ.அ.ரெடலர் 35 மில்லியன் தொகையை குறைப்பதற்கு 2022 யூன் 09 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியை வேண்டியிருந்தது. கடன் தொகையின் 53 சதவீதம் இரத்து செய்தமையால் விநியோகிக்கப்படுகின்ற தடுப்பூசி தகவல் மற்றும் பராமரிப்பு செயற்பட்டு முறைமை, வழங்கப்படுகின்ற தடுப்பூசி போக்குவரத்து வசதிகள் மற்றும் தடுப்பூசி தொடர்புபட்ட மருத்துவக் கழிவு முகாமை செய்தல் போன்ற செயற்திட்ட நோக்கங்களை மேற்கொள்வதற்கு சாத்தியமற்றிருந்தது. | ஆசிய அபிவிருத்தி வங்கியால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் குறித்த நோக்கத்திற்காக கடன் பயன்படுத்தப்பட வெண்டும். |